4 p.m. **Sri A. M. Allapichai** :—" Mr. Chairman, Sir, this resolution is entitled to great weight because it is coming from an eminent doctor and there is no questioning that fact. It has also been very ably supported by an eminent lawyer. But we have also to consider the resolution from some other points of view as well. Now the mover of the resolution has said that there are about 50,000 heads of cattle in the City. I think that information must be correct. These animals are looked after usually by the shepherd class and others who make a living out of them. We can say roughly about a lakh of people live on these animals, milking cows and selling their milk. To ask the House to take steps to see that these animals and their owners are sent away from the City of Madras may be correct if we consider the question from the point of view of health. But we must take a practical point of view in such matters. What will happen to these one lakh of people if they are sent away from the City along with these animals? The hon. Member, Mr. Annamalai Pillai said that we were not quite justified in saying that the City's health alone was important. He asked: 'When you are so particular about the City's health, why are you indifferent to health in other parts of the State?' In the speech made by the hon. Mover of the resolution, there was one significant sentence and it is this. He said that the Corporation was not able to insist upon the construction of model sheds. It would be a constructive suggestion if he said that model sheds should be insisted upon by the Corporation or the Government. No doubt, the suggestion will cost something to the people who have got cows. But they make a lot of money out of these animals and it is their imperative duty to see that they keep their cows in model sheds. Then, Sri Annamalai Pillai said that cow dung had more

medicinal value. That has been our experience and also our ancients have said it. What I want to say is cow dung is put to lot of misuse. It is now turned into what is called ‘ varatti ’ which is used as fuel. It is used in the place of logs of wood. Now the Corporation can make some arrangement whereby this cow dung can be accumulated in some place and converted into manure. Let us try to make the best use of it and let us see that something is done to see that it is put to proper use. Then the danger may not be great. I do not in any way criticise the doctor, Sir, for he is quite justified in moving the resolution. But there are some difficulties in accepting it. When we introduced Prohibition, a large number of people (toddy-tappers) were thrown out of employment. No doubt, Prohibition is an absolute necessity and so the Government took it up. Now again we cannot be throwing out of employment a lakh of people in this way. Perhaps this point has not worked in the mind of the doctor.

“ Therefore, while I sympathise with the doctor for having moved this resolution, I wish he had examined the question from a practical point of view and put forth a suggestion to have model sheds constructed either by the milkmen or by the Corporation itself. That will minimise danger to a very great extent.”

* **The Hon. Sri A. B. SHETTY** :—“ Mr. Chairman, Sir, I can quite understand and appreciate the object underlying this resolution. But this resolution is worded in a different manner. The hon. the Mover of the resolution seeks the introduction of legislation for prohibiting the keeping or breeding of all domestic animals within the limits of the City of Madras with the exception of horses or bulls or bullocks. If he had said that the milch cattle of milkmen should be removed from the City limits, though not at once, at least in stages, and that we should start milk colonies or milkmen’s colonies in the outskirts of the City, that would have been a reasonable proposition. But here his object is one and the wording of the resolution is for a wider purpose. If his object is to safeguard the health of the people and to ensure sanitary conditions of living, I do not know why he makes an exception in the case of horses, bulls and bullocks. They are equally bad. I do not think that bulls are generally used for drawing vehicles. It is bullocks. Uncastrated bulls are very dangerous. (Laughter.) Now the City Municipal Act, the District Municipalities Act and the Public Health Act have provisions for taking necessary measures for preventing nuisance and danger to health in the City of Madras and other municipalities. There are adequate provisions for regulating and controlling the keeping and breeding of domestic animals within the City. Section 116 of the City Municipal Act empowers the Corporation to levy a tax on specified classes of animals; cows and she-buffaloes are not included in the list. Under section 280 of the Act, nobody can keep pigs in the City without the permission of the Commissioner and also certain other animals

and birds which are a source of nuisance. There is section 282 of the City Municipal Act according to which a person who wants to maintain a stable, shed or other places in which quadrupeds are to be kept has to obtain a licence. So, these are the various provisions which are intended to ensure public health and safety. It is not possible to prevent altogether the keeping of domestic animals in the City. It will give rise to many practical difficulties. But we can see that the animals (domestic animals) are kept in such a way as to ensure public health and safety. The hon. Member and other Members of this House may like to know that the Commissioner of the Madras Corporation, the Health Officer of the Corporation and the Registrar of Co-operative Societies have drawn up a scheme for the establilshment of a milk colony near Madras in conjunction with the Corporation's scheme for the opening of a sewage farm. Their object is to evacuate milch cattle by stages from the City and to set up colonies in the outskirts of the City, the milkmen to remain there and the cattle to be housed 4-10 p.m. under proper sanitary conditions. The expert committee presided over by Dr. A. Lakshmanaswamy Mudaliar which went into the question of the milk factory at Teynampet where milk is reconstituted and sold also recommended that a scheme should be started for establishing a milkmen's colony outside the City and for removing milch cattle there by stages for their being settled there. That is a very reasonable proposition and Government are considering the recommendation of the Committee as well as that of the Corporation and it is proposed to address the Government of India to provide grants for not less than 50 per cent of the total expenditure of the scheme. The resolution as it is worded is very wide and I do not think Government can accept the resolution. I request the hon. Member, Dr. A. Sreenivasan, to kindly withdraw the resolution. At the same time I can assure him that the question of starting a milk colony in the outskirts of the City will be given due consideration."

* DR. A. SREENIVASAN :—" Sir, of course, the Whip of the Opposition was rather flippant when he said that I made exception in the case of bulls and bullocks. The Hon. Minister has said that these things must be done in gradual stages. I also wanted to do things in gradual stages. There are only 165 bullock-carts, I mean double carts and the single carts number only about 300. There are only a few hundreds of horses. Therefore as Mr. Chakkarai Chettiar said instead of creating unemployment by removing bullock carts and single carts from the City (the men who operate these carts will be deprived of their jobs if we remove these carts outside) I thought we could make a beginning by removing these milch cows to the outskirts of the City, for these cows could have no employment problem but that they could be kept safely in a colony outside the City limits. That is not the case with the bullock and single cart drivers. A car driver must be a driver. But a milch cow can be taken care of by anybody

else. That is why I wanted these milch cows to be removed first and then I thought by gradual stages these bullock carts could be removed. That was my point. Of course the Corporation has some cow-sheds. But they are not able to accommodate all of them. And these cows are kept in most uncongenial surroundings that it is a crime to keep them under such conditions. (Sri K. Bashyam : ' Crime against the cows.') It is a crime against the cow as well as the man who keeps them under such conditions. These things cannot be done in a day. We could not depend on transport for removing these things outside the City. We have to reckon on human help. That is why for doing things in gradual stages, I thought we could make a beginning by first removing these milch cows outside the City. Then I thought we could come to bullock carts, etc. That is the object of the resolution.

'' With your permission, Mr. Chairman, I want to reply in Tamil to what Mr. Annamalai Pillai has spoken about me in Tamil.

" கனம் சேர்மன் அவர்களே, நானும் தமிழில் பேச விரும்புகிறேன். என்னை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் சொல்வதைப் புரிந்துகொள்ள முடியும்.

" கனம் அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் கோசாலை என்பதுபற்றிச் சொன்னார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பசு இருக்கவேண்டும் ; அவைகள் சாணம் போடவேண்டும் ; அவைகளை மனிதர்கள் உட்கொள்ளவேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். அது எதோ ஒரு காலத்தில் இவ்வாறு எழுதிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால் இது இன்றுள்ள சுகாதார முறைப்படி பார்க்கும்போது, அவைகளை நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். இன்றுள்ள சுகாதார முறைப்படி அவைகளை உட்கொண்டால் வியாதியே ஏற்படும். கடவுள் பெயரைச் சொல்லி பாஷாணத்தைக்கூட உட்கொள்ளலாம் என்பது அவருடைய அபிப்பிராயம். ஆனால் இன்றுள்ள சாதாரண ஜனங்கள்கூட அவ்வாறு கடவுள் பேரைச் சொல்லி பாஷாணத்தை உட்கொள்ளத் தயாராக இல்லை."

Sri N. ANNAMALAI PILLAI :—" நான் பாஷாணம் என்று சொல்லவில்லை. பஞ்சகவ்வியத்தைச் சாப்பிடலாம் என்றுதான் சொன்னேன். கோமியம் ரொம்ப சிறந்தது ; சாணம் ரொம்ப சிறந்ததென்று ஒரு அமெரிக்க டாக்டர்கூட எழுதியிருக்கிறார். இவரைப்போல் அவரும் ஒரு டாக்டர்தான். எனக்கு என்ன தெரியும் ? அவரைப்போல் ஒரு டாக்டர் எழுதியதை ஒரு பத்திரிகையில் படித்துத்தான் சொல்லுகிறேன். கனம் பெருமாள்சாமி ரெட்டியார் அவர்கள்கூட இப்போது எல்லோருக்கும் முன்பாக சாணத்தினால் டி.பீ. வியாதி தடுக்கப்படுகிறது என்று கூறினார்கள். இதையெல்லாம் நான் சொல்லவில்லை ; நான் பாஷாணத்தையும் குறிப்பிடவில்லை. டாக்டர் கனம் சீனிவாசன் போன்றவர்கள் தான் இதையெல்லாம் பாஷாணம் என்று நினைக்கிறார்கள்."

* **Dr. A. SREENIVASAN** :—" நான் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாதவன். ஆகையால் கனம் அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் கூறுவதை நான் நம்பத் தயாராக இல்லை. என்னுடைய அனுபவத்தில் சாணி, மூத்திரம் இவைகளை உட்கொள்வதால் சுகாதாரத்திற்கு கெடுதல் விளைவிக்கும் என்பதே தெரிகிறது. இதுபற்றி யாரோ ஒரு அமெரிக்கர் எழுதியிருக்கிறார் என்று நண்பர் அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் சொன்னார்களே, அவர் யார் என்பதை அதிகார பூர்வமாகச் (Authoritative)

சொன்னால் அதை நான் பார்த்து அப்படி அது தவறாக இருந்தால் ஒப்புக் கொள்ளத் தயார். அப்போது பின்வாங்கிக் கொள்வதற்கும் தயார். அதுவரை எனக்கு பைத்தியம் பிடித்தால்கூட இதை ஒப்புக்கொள்ள மாட்டேன். பைத்தியத்திலும்கூட நான் இதைச் சொல்லவும் மாட்டேன்."

Sri N. Annamalai Pillai :—" இவ்வாறு வசிஷ்டர் சொல்லியிருக்கிறார். நான் சொல்லவில்லை. வேதத்திலே சொல்லியிருக்கிறது."

***Dr. A. Sreenivasan** :—" வேதத்திலே அப்படி கூறியிருக்கலாம். கண்ணால் பார்ப்பதையே நம்பாத இந்தக் காலத்தில் யாரோ எதையோ, என்னவோ கூறினால் அதை அப்படியே நம்பி அவர்கள் சொல்லியவாறு நடக்கவேண்டுமென்பதில்லை. அவ்வாறு நடந்தால் அது கெடுதலைத்தான் உண்டாக்கும். இதை நான் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளவும் முடியாது. ஒருவன் சொன்னான் என்பதற்காக, அதைச் செய்வது தப்பு. நாம் அதை நன்கு பரிசீலனை செய்து பார்த்து, பின்னால் அது உண்மையாக இருந்தால் அதை ஒப்புக்கொள்ளவேண்டும். இல்லையேல் அதை நம்பவேகூடாது."

Sri K. Balasubramanya Ayyar :—" அது ரொம்பப் பிசகு என்று நான் சொல்லுகிறேன்."

Dr. A. Sreenivasan :—" Of course there may be differences of opinion. There is bound to be difference of opinion on this question.

" பசுக்களை கிராமங்களுக்கு அனுப்பி, அங்கு கொசு கடிப்பதால் நாங்கள் செத்துப் போகவேண்டுமா என்று கனம் அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் கேட்டார். நான் அப்படிச் செத்துப்போகவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. கிராமங்களுக்கு கொண்டுபோனால் சுகாதாரமாக இருக்கலாம் என்பதற்காகவே சொன்னேன். பட்டணத்தில் 100 சதுர அடிக்கு எவ்வளவு ஜனத்தொகை வாழ்கிறார்கள், கிராமத்திலே 100 சதுர அடிக்கு எவ்வளவு பேர்கள் வாழ்கிறார்கள் என்பதைப் பார்த்தால், பட்டணத்திலே 10 சதுர அடிக்குள் ஒரு குடும்பம், இரண்டு குழந்தைகள், சம்சாரம், இதிலே மாடு வேறு, ஆக ஒரே கூட்டமாக இருக்கிறது. ஆனால் கிராமங்களிலே அப்படி ஜாஸ்தியாக நெருக்கடி இருப்பதில்லை. அங்கு டைல்யூஷனாக இருப்பதற்கு இடவசதிகள் அமைந்திருக்கிறது. ஆகவேதான் அங்கு ஆடுமாடுகளை கொண்டுபோவதால் மிகவும் வசதியாக இருக்குமென்று சொன்னேன். ஆனால் பட்டணத்தை எடுத்துக்கொண்டால் கான்சென்ட்ரேஷனாக அதாவது மிகவும் நெருக்கடியாக ஜனங்கள் வாழ்ந்து வருகிறார்கள். கிராமங்களிலே என்றால், ஆடு மாடுகளுக்கு அதிக இட வசதி உண்டு. நல்ல முறையிலே கொட்டகை யெல்லாம் போடமுடியும். அங்கு ஜல வசதியும் நன்கு கிடைக்கும். பட்டணத்தை எடுத்துக்கொண்டால், இன்று குடிப்பதற்குகூட நல்ல முறையில் ஜல வசதி யில்லை. அப்படியிருக்கும் போது கொட்டகைகளை கழுவுவதற்கு இங்கே எங்கே தண்ணீர் கிடைக்கப் போகின்றது ? கிராமங்களிலே என்றால் கொட்டகைகளை நல்ல முறையில் சுத்தமாக வைத்துக்கொள்ளமுடியும். அதற்காகத்தான் சொன்னேனே தவிர, கிராமங்களில் உள்ளவர்கள் செத்துப்போக வேண்டும் என்பதற்காகவோ, பட்டணத்திலே உள்ளவர்கள் சுகமாக இருக்கவேண்டுமென்பதற்காகவோ சொல்லவில்லை.

" I am withdrawing the resolution on the assurance given by the Hon. the Minister for Public Health."

" With the permission of the House, the resolution of Dr. A. Sreenivasan was withdrawn.

(2) MEASURES FOR DECORATING THE STATE LEGISLATURE HOUSES ON THE LINES OF THE RECOMMENDATIONS CONTAINED IN THE REPORT OF THE PLANNING SUB-COMMITTEE ON DECORATING THE PARLIAMENT HOUSE.

SRI T. PURUSHOTHAM :—" Sir I am not moving my resolution."

(3) AMENDMENT TO THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1948, AND THE MADRAS ESTATES LAND (REDUCTION OF RENT) ACT, 1947.

SRI S. P. SIVASUBRAMANYA NADAR :—" I move the resolution standing in any name, namely :—

> '*This Council recommends to the Government that the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 *and the Madras Estates Land (Reduction of Rent) Act,* 1947 *be amended to the effect that a permanently settled estate shall, for the purposes of the above two Acts, include all the Inam lands within the estates boundaries.*'

After the passing of these two Acts mentioned in the resolution the tenants have become ryoti tenants in the estate and also in 4-20 p.m. the major inams. But on account of the definition that is given in these two Acts, the minor inams are excluded and the old system of tenure even now continues, even though the neighbouring lands under the major inams continue to get the privileges and rights of the ryoti tenure. This anomaly is due to a historical accident. In the definition of the Act, the estate is defined to be a permanently settled estate under Regulation XXV of 1802. In that Regulation minor inam has been omitted for investigation at a later stage, but that was never done. Hence, in adopting the definition that is now given in the Estates (Abolition and Conversion into Ryotwari) Act, these minor inams have been omitted. It is easy to enable these minor inams also to get the benefit of these two Acts by amending the definition of the word 'estate' in these two Acts so as to include minor inams also.

" The objection that can possibly be raised is the payment of compensation to these lands also. For the estates that have been taken over, compensation has not yet been fully paid and the Government will have to bear an additional expenditure by way of compensation to these inamdars. My suggestion is this, Sir. In these inam lands what is given to the inamdar is an assignment of land revenue. If the lands are converted into ryoti lands and the land revenue collected is given to the inamdars, there will be no necessity to pay them any compensation. They will be satisfied if the revenue or the land tax that is collected from the ryotwari lands is given to them. Even otherwise, after the amendment of the Constitution the compensation which will have to be now paid will be far less than what the Government are now paying under the Estates Abolition Act. This would not be also against the Constitution, since under Article 31-A, the conversion of the inam land into ryoti land will not be barred and it can be easily done. Then there will be uniformity of tenure in the villages. In an estate which has been recently abolished, the ryots are enjoying the privileges of a ryotwari patta, while in the adjoining minor inams they are under the old tenure and subjected to all the hardships under that tenure. If these minor inams are also abolished there will be uniformity of tenure in the villages. So, I commend to the consideration of the House the adoption of this resolution which is a harmless one, but which will be beneficial to the people."

The resolution was seconded by Sri P. P. Ummer Koya.

Sri K. Balasubramanya Ayyar:—" Mr. Chairman, Sir, I am afraid that it will not be possible for this House to accept this resolution moved by Sri Sivasubramanya Nadar. Minor inams have got a very long history. Minor inams have been given for meritorious services rendered and for services to be rendered also. Therefore it is even at the time when the permanent Regulation of 1802 was passed, in the definition of permanently settled estate, they did not include minor inams. Even in the Estates Land Act minor inams were not included. There is great difficulty in the matter. I think the mover of the resolution himself did well in stating that the government have to pay a lot of compensation still for many of these zamindari estates that have been converted by the Estates (Abolition and Conversion into Ryotwari) Act. I think that it would take a long time for the Government to completely make the payment of compensation which they have now undertaken to pay unless under the new amendment to the Constitution, they are enabled to stop payment of compensation or reduce compensation. Merely because minor inams are also included in the permanently settled estates, to say that at the present jucture they should also be converted into ryoti lands is not quite correct. Minor inams were granted for various reasons. That question has to be separately tackled and considered and after that only minor inams can be included in the definition of ' estate '. I hope and trust Government will take up this matter a little later. I would, therefore, appeal to the mover of the resolution to better wait for some time and not press the resolution now for consideration by the Government."

The Hon. Sri M. A. Manickavelu:—" Sir, the principle of abolishing the intermediaries in the land tenure system has been accepted by the Government and it is only in pursuance of that, the Government have passed legislation abolishing the zamindaris. In this respect our State had been the pioneer in abolishing the zamindaris. Other States are now following us. In fact many State representatives and Ministers have come over to our State to find out how this legislation is working here so that they may implement it in their States. Now, as it is in order to apply this Estates Abolition Act, it must be an estate in the first instance and secondly it must be an estate which comes under the purview of the Abolition Act. Apart from the minor inams, there are other inams which have been declared estates, but they did not come under the purview of the Abolition Act. They are called the 1936 inams. That is in that year there was a legislation which made certain inams estates. They will not come under the Abolition Act. I think such inams are about 3,000 or so in number. Government have not taken any steps to apply the Abolition Act to them. Now, my hon. friend who moved the resolution wants the minor inams also to be brought under the Abolition Act. As the hon. member Sri K. Balasubramanya Ayyar pointed out, there is some difficulty in the case of minor inams which we have to carefully examine. The Government are desirous of passing some legislation to abolish these intermediaries and towards that end, I think in the first place 4-30 p.m. they have to tackle the 1936 inams. Now if both these kinds of inams are abolished according to the Zamindari Abolition Act, compensation will have to be paid. It has been estimated roughly that a sum of Rs. 20 crores will have to be paid as compensation. Already in the case of the zamindaris which have been abolished, the Government have committed themselves to pay compensaton to the extent of Rs. 12½ crores. We must look into the question whether the Government can afford to pay this compensation now. Incidentally I may say that there is a move in Parliament to amend the Constitution in the matter of paying compensation for lands acquired by Government. I think it is worthwhile to wait for the conclusion in the matter so that that decision may facilitate our attempt to abolish all these inams. To accept the resolution, as it is, is impracticable, because the resolution contemplates all sorts of inams. It is very vague. There are under-tenure inams and other inams. Therefore, I would assure the hon. Member and restate that the Government are already seized of this problem and that they would bring in legislation to abolish some more estates which are in the nature of intermediaries. The Government will take every step towards that end. I would therefore request the hon. Member to withdraw his resolution and look forward eagerly for what the Government are going to do in the course of one or two years."

SRI S. P. SIVASUBRAMANYA NADAR:—" Sir, in view of the assurance given by the Hon. Minister I withdraw my resolution."

The resolution was withdrawn by leave of the House.

(4) MEASURES FOR CONDUCTING THE PROCEEDINGS IN THE DISTRICT OFFICES OF CHINGLEPUT, SOUTH ARCOT AND NORTH ARCOT IN TAMIL.

* **Sri A. GAJAPATHY NAYAGAR** :—" மன்றத் தலைவர் அவர்களே, இப்போது என் பேரிலுள்ள தீர்மானத்தை நான் முதலில் ஆங்கிலத்திலேயே படிக்கிறேன்.

> '*This House recommends to the Government to replace English by Tamil in all the proceedings conducted in the district offices of Chingleput, South Arcot and North Arcot and in all their correspondence* inter se *and with the departments of Secretariat.*'

" இதைத் தமிழில் சொல்லவேண்டுமென்றால், செங்கற்பட்டு மாவட்டம், தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் இருக்கும் அலுவலகங்களிலும், இவைகளுக்கு இடையேயும், இவைகளுக்கும் சென்னை வாழ் செகரடேரியட்டுக்கும் நடக்கும் கடிதப் போக்குவரத்துக்கள், இப்போது நடைபெறும் ஆங்கிலத்தில் இருப்பதைத் தவிர்த்து, தமிழ்மொழியில் நடத்தவேண்டுமென்று அரசாங்கத்தாரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

" இதை என் கொண்டு வந்தேனென்றால், இதற்கு முன்னதாக தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வந்தேன். அது இந்த சட்ட சபையில் இருக்கிறது. நமது மாகாண கவர்னர் பெருமான் அவர்களால் அதிக செலவாகும் என்று அதை விவாதிக்க உத்திரவு அளிக்கவில்லை. அக்காலத்தில் நிதி அமைச்சரைக் கேட்டதற்கு, கவர்னர் பெருமான் அனுமதி அளிக்காத காரணத்தினால் அது அப்படியே உயிருடன்தான் இருக்கிறது என்று கூறினார். அது இப்பொழுது எப்படியிருக்கிறது என்றால் இருந்தும் இல்லாதது போல் இருக்கிறது. **It is in a state of suspended animation.** அப்படி இந்த மசோதா ஏற்கனவே இருக்கும்போது, இந்தத் தீர்மானம் எதற்கு என்று கேட்கலாம் ? அதை அப்படியே சும்மா விட்டுவிடாமல், மேலும் மேலும் தமிழை வளர்க்கும் முறையில் இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்றேன். தீர்மானம் என்ன சொல்லுகிறது ? மூன்று மாவட்டங்களிலும் நடைமுறையில் நடவடிக்கைகள் தமிழில் நடைபெற வேண்டுமென்று சொல்லுகிறது. இப்போது திருச்சியிலே நமது அரசாங்கம் அங்கு நடக்கும் நடவடிக்கைகள் எல்லாம் தமிழில் நடக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே, இந்தத் தீர்மானமும். இப்போது திருச்சி ஒன்றிலே இருக்கிறது. நான் கொண்டுவந்திருக்கும் தீர்மானம், திருச்சி மாவட்டத்திலே நடப்பதோடு மட்டுமல்லாமல், மற்ற மூன்று மாவட்டங்களிலும் அதாவது செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் அவைகளுக்கு இடையேயும், சென்னையிலே உள்ள செக்ரிடேரியட்டுக்கு இடையிலும் கடிதப்போக்கு வரத்துக்கள் தமிழில் நடக்கவேண்டுமென்று கூறுகிறேன். ஒரு மாவட்டத்திற்குள்ளேயே நடந்தால் அது நாட்டுப்புற மொழியாகத்தான் இருக்கும். அப்படியல்லாமல் செகரடேரியட்டிற்கும் சம்பந்தம் வைத்துக் கொண்டால், அது நாட்டு மொழியாக அமையும். அப்போது ஒரு மதிப்பையும் பெறும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்தால் இதை ஒப்புக்கொண்டு செய்யலாம். செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" திருச்சியிலே மட்டும் கொண்டுவந்திருக்கிறார்கள். அது எவ்விதம் நடைபெறுகிறது என்று பார்த்தால், பொறுப்பற்ற நிலையில்தான் நடைபெறுகிறது. அது எப்படி நடைபெறுகிறது என்று யார் கவனிக்கிறார்கள். அது எப்படி நடைபெறுகிறது என்பது பற்றி ஏதாவது ரிப்போர்ட் உண்டா ? எதுவும் கிடையாது. அதைப்பற்றி கண்காணிப்பு கிடையாது. ஒருவித

மான பாதுகாப்பும் கிடையாது. இப்படி பொறுப்பு இல்லாமல் அமுல் நடத்தினால் அது ஒழுங்காக இல்லாமல் போய்விடுகின்றது. அதற்காகவே இந்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் தீர்மானப்படி திருச்சிக்கும், சென்னையில் உள்ள செகரடேரியட்டிற்கும் தமிழில் போக்கு வரத்து நடந்தால், அப்போது நடவடிக்கைகள் நன்றாக நடக்கும். காரணம், அப்போது பொறுப்பு ஏற்படும். உண்மையில் தமிழ் மொழி வளரும். நமது இந்திய பேரரசை எடுத்துக்கொண்டால் ஹிந்தியை வளர்ப்பதற்குச் சங்கங்கள் வைத்து, விரைவில் ஹிந்தியையே அரசியல் மொழியாக ஆக்கவேண்டுமென்பதற்காக எந்தெந்த விதங்களில் வளர்ந்து வரச் செய்கிறார்கள். நம்முடைய நாட்டிலே எடுத்துக்கொண்டால், தமிழ் மொழியை வளர்ப்பதற்கு எந்த விதமான திட்டமும் கிடையாது, சட்டமும் கிடையாது. திருச்சியில் இன்று நடைபெறும் விதம், குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொள்வதுபோல் தான் இருக்கிறது. அப்படி எத்தனை நாளைக்கு ஓட்ட முடியும் ? என்றைக்கு இருந்தாலும் வெளியே கொண்டுவரத் தானே வேண்டும் ? அப்போது ஏன் உடனடியாக சென்னைக்கு இப்போதே கொண்டுவரக்கூடாது ?

"இப்போது வரவு செலவு திட்டத்தை இந்த ஆண்டு தமிழிலே அச்சடித்துக் கொடுத்தார்கள். அது எல்லோருக்கும் ரொம்பவும் உதவியாக இருந்தது. நாம் பேசுவதெல்லாம் தமிழ் மொழி ; கனம் மந்திரி அவர்கள் பேசுவதும் தமிழ்மொழி. ஆனால் சில அங்கத்தினர்கள் கேட்பதற்காக உடனே ஆங்கிலத்தில் பேசிவிடுகிறார்கள். இவ்வாறு சில சமயங்களில் மற்றவர்களைக் கவனியாது பொறுப்பில்லாமல் பேசிவிடுகிறார்கள். ஆத்திரத்தில் பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம். எல்லா நடவடிக்கைகளையும் இன்று ஆங்கிலத்திலே அச்சடித்துக் கொடுத்து விடப்படுகிறது, ஆனால் பேசுவதெல்லாம் தமிழ் மொழி. என்ன பொருத்தம் ? தமிழில் அச்சடித்து இருந்தால்தான், தமிழ் ஆர்வம் பிறக்கும். அப்பொழுது அம்மொழி பழக்கத்திற்கு வரும். அச்சிலே கொண்டு வருவதற்கு அச்சப்பட்டுக்கொண்டு, தமிழிலே மட்டும் பேசி என்ன பயன் ? அச்சமில்லாமல் கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் தமிழிலே நடத்துவதற்கு முன் வர வேண்டும்.

"இரண்டாவதாக, நமது செகரடேரியட்டில் பல ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தமிழிலே ரொம்ப ஆர்வம் கொண்டவர்கள். தமிழிலே வரவேண்டுமென்ற எண்ணம் உடையவர்கள். தமிழை இரண்டாவது மொழியாகப் படித்தவர்கள். அவர்களால் எவ்விதக் குறையும் வராது. அவர்கள் ஐ.எ.எஸ்., அல்லது ஐ.சி.எஸ். என்ற பெரிய படிப்பை படித்தவர்கள். அவர்கள் உதவி செய்யத் சித்தமாய் இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் உதவியும் இதிலே நல்ல முறையில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"கவர்னர் பெருமான், அதிக செலவாகும் என்ற காரணத்தினாலே அப்போது சொல்லியிருக்கலாம். ஆனால் முதலில் சிறியளவு செலவில் இதை ஆரம்பிக்கலாமே ? செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சென்னை நகரத்திலுள்ள செகரடேரியட்டு ஆகியவற்றிற்கு மட்டும் சிறிய செலவிலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு தமிழ்த் தட்டெழுத்தாளர்கள், இரண்டு தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களை நியமித்து, ஒரு சிறிய அலுவலகம் நடத்தினால் அதன் மூலம் நாட்டிலே எவ்வளவோ தமிழ்ப் பற்று வளரும் ; தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக வளரும். சும்மா செலவு ஆகிறது என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் பிரயோஜனமில்லை. பணம் எதற்காக இருக்கிறது ? இம்மாதிரியான நல்ல முறைக்கு பயன்படத்தானே இருக்கிறது. ஏதோ நான் கொண்டு வருகிறேன் என்பதற்காக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. நிதி அமைச்சர் அவர்களே இந்தத் திருத்தத்தைக் கொண்டு

வருவதாக எண்ணி, இதைச் செய்வதற்கு மனம் கொள்ளவேண்டும். கருணை கூர்ந்து இந்த மூன்று மாவட்டங்களுக்கும் உடனடியாக தமிழில் எல்லாப் போக்குவரத்துக்களும் நடத்துவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

“இப்போது சில தலைவர்கள் இங்கு பெரும்பாலும் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். நானும் இம்மாதிரி ஒரு காலத்தில் ஆங்கிலத்திலேயே தான் பேசிக்கொண்டிருந்தேன். ஆனால் இனிமேல் அம்மாதிரி எவ்வளவு நாளைக்கு முடியுமென்று பார்க்கும்போது, கொஞ்ச நாட்களுக்கே முடியும். கல்லூரிகளிலே தான் ஆங்கிலம் வளர்க்கப்பட்டு வந்தது. இப்போது அங்கும் இனிமேல் தமிழ் வந்துவிடப் போகின்றது. ஒரு சிலர் ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் உண்மையில் நாளுக்கு நாள் இவ்வெண்ணம் குறைந்துகொண்டு வருவதையே நாம் பார்க்கிறோம். அதிலும் நமது நாட்டிலே இன்னும் 10 ஆண்டுகளுக்குள் எல்லா நடவடிக்கைகளும், தமிழிலே இருக்க வேண்டும்; ஹிந்தி மொழி ஆட்சி மொழியாக வரவேண்டுமென்றிருக்கிறது. ஆகவே பிற்காலத்தில் வரக்கூடியதைப் பற்றி இப்போதே தயாரித்துக் கொள்ள வேண்டாமா? ஆகையால் என்னுடைய தீர்மானத்தின் மூலம் சர்க்காரை வற்புறுத்துவதற்காக கொண்டுவரவில்லை. நாளைக்கு வருவதை இன்றைக்கே தயார் செய்து கொள்ள வேண்டியதை ஞாபகப்படுத்தும் முறையிலேயேதான் கொண்டு வந்திருக்கிறேன். ஆகையால் இந்த மூன்று மாவட்டங்களுக்கும், சென்னையிலே செகரடேரியட்டிற்கும் இடையே மட்டும் எல்லா போக்குவரத்துக்களும் இனிமேல் தமிழில் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி நான் சொல்லும் போது நண்பர் மேனன் அவர்கள் என்னை கண்ணால் உருட்டிப் பார்க்கின்றார்.”

Sri M. P. GOVINDA MENON:—“I don’t object to what you say.”

4-40 p.m. ***Sri A. GAJAPATHY NAYAGAR**:—“இந்த மசோதாவில் என்ன சொல்லப்படுகிறது என்றால், தமிழ் மாவட்டங்களாகிய மூன்று மாவட்டங்களில் மட்டும்தான் தமிழில் நடக்க வேண்டுமென்று சொல்லுகின்றேனே தவிர, மலபாரையும், கன்னடத்தையும் இதில் சேர்க்கவில்லை. அவர்கள் ஆங்கிலத்திலேயே பேசட்டும்; அல்லது அவர்களுடைய மொழியிலேயே நடத்தட்டும். அதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. அவைகளைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் தமிழ் ஏற்படுத்தலாம். ஆகவே தான் முதலில் மூன்று மாவட்டங்களை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அப்படி எழுதப் பழகினால் என்ன ஆகும் தெரியுமா? ஒருவருக்குள் ஒருவர் தமிழை நன்கு கற்றுக்கொள்ளலாம். நாளடைவில் ஆங்கிலமும் குறைந்து விடும். பிற்காலத்தில் செய்யவேண்டியதை நாம் முன் ஜாக்கிரதையாகவே செய்தவர்களாகவும் ஆகிவிடுவோம். இதையெல்லாம் உணர்ந்துதான் அப்போது தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற மசோதாவையும் கொண்டு வந்தேன்; இப்போது அதை நினைவூட்டும் முறையிலேயே இந்தத் திருத்தத்தையும் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே ஆட்சியாளர்கள் இதற்கு கருணை கூர்ந்து இந்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதோடு, இதைச் செய்வதால் தமிழ் மொழி உயரும்; தமிழ் மக்கள் சிறப்படைவார்கள்; தமிழ் நாடு முன்னேறும். அதற்கு அரசியலார் உதவி செய்யவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.”

Dr. A. SREENIVASAN:—“Sir, I second the resolution moved by Sri Gajapathy Nayagar.”

Mr. CHAIRMAN:—“Motion moved—

‘This House recommends to the Government to replace English by Tamil in all the proceedings conducted in the district offices of Chingleput, South Arcot and North Arcot and in all their correspondence *inter se* and with the departments of Secretariat .' "

*** Sri A. SUBRAMANYAM** :—" கனம் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு முதலிய மூன்று ஜில்லாக்களில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டுமென்றும், இந்த மூன்று ஜில்லாக்களிலும் தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளையும் நடத்தவேண்டுமென்றும் அதோடு செக்ரடேரியட் காரியாலயத்தையும் சேர்த்துக்கொண்டு அதற்கிடையே கடிதப் போக்குவரத்து ஏற்படுத்தவேண்டுமென்றும் ஒரு நியாயமான தீர்மானத்தை எனது மதிப்பிற்குறிய நண்பர் கனம் கஜபதி நாயகர் கொண்டு வந்தது மிகவும் பொருத்தமானது என்று சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் ஆந்திர நாடு பிரிந்த பிறகு இந்த நாடு இப்போது தமிழ் நாடாக விளங்குகிறது. தமிழிலே பேசக்கூடிய அங்கத்தினர்கள் தான் இந்த கவுன்ஸிலில் அதிகமாக இருக்கிறார்கள். குறிப்பிட்ட வேறு பாஷைகள் பேசக்கூடியவர்கள் இருந்தாலும் கூட அவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் இருக்கிறார்கள். அவர்களுடைய சௌகரியத்தை நாம் ஒரு பக்கம் கவனிக்க வேண்டியிருந்தாலும் கூட, தமிழில் பேசக்கூடிய மக்கள் பெருவாரியாக இருப்பதால், தமிழிலேயே, தாய் மொழியிலேயே நடவடிக்கைகளையெல்லாம் நடத்தவேண்டும் என்பது என்னுடைய ஆசை. நமது புரட்சிக் கவிஞர் பாரதியாரும் கூட

'வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ, போ, போ
நூறு நூல்கள் போற்றுவாய், மெய்கூறும்
நூலிலொத்தி யல்கிலாய் போ, போ, போ.'

என்று கூறி நமக்கு எச்சரித்து இருக்கின்றார்.

" நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் தமிழின் இன்பத்தை அனுபவிக்கிறோம். கொஞ்ச நேரத்திற்கு முன் மிருகங்களைப்பற்றி பேசினார்கள். பகுத்தறிவில்லாத மாடுகள் " அம்மா " என்று தான் கத்துகின்றது. அதுவும் தமிழ் உச்சரிப்பையே உச்சரிக்கின்றது. நம் தாய் பாஷை எவ்வளவு எளிதான வகையில் இருந்து வருகிறது. ஆகவே, நம் தாய் பாஷையாகிய தமிழை புறக்கணிக்கக்கூடாது. ஏதோ கொஞ்சநாள் கழித்து மெதுவாக கொண்டு வரலாமென்று இந்த விஷயத்தில் இருந்துவிடாமல், அரசாங்கம் தமிழ்மொழியை உடனடியாக ஆட்சி மொழியாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இது மிகவும் முக்கியமானது. அடுத்த தேர்தல் நடக்க இருக்கிறது. தேர்தலிலே தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வருவோம் என்று சொல்லவேண்டிய நிலைமை எற்பட்டு விடக்கூடாது. இப்போது கொண்டு வந்தால் தான் வாக்காளர்கள் அதிகமான வோட்டுக்கள் அளித்து நம்மைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆகவே, ஆட்சியிலுள்ள அரசாங்கம் முந்திக் கொள்ள வேண்டும். மலையாள பாஷை பேசும் அங்கத்தினர்களுக்கும், கன்னடத்தில் பேசும் அங்கத்தினர்களுக்கும் உரிய பங்கு அளிக்க முடியும். நாம் தமிழில் பேசுவது போல் அவர்களும் மலையாளத்திலும், கன்னடத்திலும் பேசலாம். நாம் அதை ஆட்சேபிக்கப் போவதில்லை. கன்னடத்திலும் மலையாளத்திலும் பேசுகிற அங்கத்தினர்கள் 4, 5 பேர்கள் தான் இருப்பார்கள்.

" ஒரு எழுத்துத் தட்டு மெஷின் ஒன்றை வாங்கி ஒரு டைபிஸ்டை ரூ. 75 மாத சம்பளத்திற்கு நியமிப்பதால் ஒன்றும் செலவு அதிகமாக போய்விடாது. சாதாரணமாக ஒரு மெஷின் 600 ரூபாய்க்குமேல் ஆகாது. ஒரு தடவை வாங்கிவிட்டால் மறுபடியும் வாங்கப்போவது கிடையாது. இதுமாதிரியான நல்ல காரியம் செய்தால் நன்மை ஏற்படும். அதோடு

வேலையில்லாதவர்களுக்கும் ஓரளவு வேலை கொடுக்கமுடியும். எனவே, இதையெல்லாம் ஆலோசித்துப் பார்த்து கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை மூன்று ஜில்லாக்களிலும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவல்லாமல் பக்கத்திலே இருக்கும் சேலம் ஜில்லாவுக்கும் கொண்டுவந்தால் மிகவும் நலமாக இருக்குமென்று நினைக்கின்றேன். ஏனென்றால் இந்த மூன்று ஜில்லாக்களின் பக்கத்திலேயே தான் சேலம் ஜில்லாவும் இருக்கிறது. எல்லாம் ஒரு பார்டரில்தான் இருக்கிறது. ஆகையால் இதையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, நான்கு ஜில்லாக்களிலும் தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளும் நடைபெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" என் கோயம்புத்தூரையும் சேர்த்துக்கொள்ளலாமே ? "

* **SRI A. SUBRAMANYAM** :—" தாராளமாகச் சேர்த்துக்கொள்ளலாம். எனக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. அதையும் சேர்த்துக்கொண்டால், பழம் நழுவி பாலில் விழுவது போல் ஆயிற்று. சாதாரண பாயாசத்தில் சர்க்கரையுடன் முந்திரி திராட்சை போட்டமாதிரி இருக்கும். அப்படிச் செய்தால் எல்லோருக்கும் சந்தோஷம்தான். ஆனால் கனம் மந்திரி அவர்கள் இதைப்பற்றி இன்னும் யோசனை செய்துகொண்டே இருக்கக் கூடாது. காரியங்கள் ஆமை வேகத்தில் இல்லாமல் துரிதமாக நடவடிக்கை எடுத்துகொள்ளவேண்டுமென்று மறு முறையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" சில வாரத்திற்கு முன்பாக செக்ரெடேரியட்டிலிருந்து சப்ளிமெண்டரி பட்ஜட் அறிக்கை கொடுப்பதுபற்றி எனக்குக் ஒரு கடிதம் வந்தது. அதில் பட்ஜட் அறிக்கை தமிழில் கொடுப்பதாக இருந்தது. ஆனால் அது ஆங்கிலத்தில்தான் இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இம்மாதிரியான பல தவறான விஷயங்கள் நடந்துவிடுகிறது. இதன் காரணத்தையும் பரிசீலனை செய்யவேண்டும். எல்லா விஷயங்களும் இனிமேல் தமிழிலேயே நடந்தால் இந்த நாட்டின் பெருமை நன்கு உயரும்.

" ஸ்ரீ கஜபதி நாயகர் அவர்கள் சொன்னதுபோல் ஒரு சில எழுத்துத் தட்டும் டைபிஸ்டுகளை அமர்த்துவதினால் அரசாங்கத்திற்கு ஒன்றும் பெரும் செலவு ஏற்பட்டுவிடாது. அரசாங்கம் இதனை செய்யவேண்டும் என்று நினைத்தால் கட்டாயம் இதைச் செய்துவிட முடியும். பணத்தைப்பற்றி இப்பொழுது கவலைப்படவேண்டியதில்லை. இப்பொழுது துண்டுவிழும் பட்ஜட்டை சரிக்கட்டுவதற்கு சர்சார்ஜ் வரி எப்படி விதித்தார்களோ, இது மாதிரியாக இதற்காக துண்டுவிழும் பணத்தை வேறுவிதமாகச் சரிக்கட்டி விடலாம். இல்லாவிட்டால் அரசாங்கத்தில் ரிசர்வ் பண்டு தொகை இருக்கவே இருக்கிறது. அது எதற்காக இருக்கிறது ? அதை ஏன் இம்மாதிரியான நல்ல காரியங்களுக்குச் செலவிடக்கூடாது. சும்மா பணத்தை ஏன் நீண்ட காலத்திற்கு ஒதுக்கிவைக்கவேண்டும். நம் தாய் நாட்டிற்கும், நம் தமிழ் மொழிக்கும், நம் தமிழ் மக்களுக்கும் உகந்த காரியத்திற்காக தாராளமாக உபயோகப்படுத்தலாமே. அது நம் கடமையும் ஆயிற்றே. ஆகவே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் ஆழ்ந்து சிந்தனை செய்து தேவையின் அவசியத்தை உணர்ந்து இப்பொழுது கொண்டு வந்திருக்கும் தீர்மானத்திற்கு முழு ஆதரவு கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மட்டுமல்லாமல் சேலத்தையும் சேர்த்துக்கொண்டு செக்ரேடேரியட்டுக்கும் இடையே கடிதப் போக்குவரத்துக்களை தமிழிலேயே ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு இத்தீர்மானத்தை நான் முழுமனதுடன் ஆமோதிக்கின்றேன்.

4-50 p.m. * **DR. A. SREENIVASAN** :—" கனம் தலைவர் அவர்களே, நான் இந்த தீர்மானத்தின் பேரில் நடக்கும் விவாதத்தில் கலந்துக்கொள்ள மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்தத் தீர்மானம் மிகவும் நல்லத் தீர்மானம். காரணம் என்னவென்றால், சில மாதங்களுக்கு முன் நான் நாக்பூர் சென்றிருந்தேன்."

SRI A. GAJAPATHY NAYAGAR :—" நாக்பூர் அல்ல, நாகபுரி என்று சொல்லவேண்டும். "

DR. A. SREENIVASAN :—" எனக்குத் தெரிந்த தமிழிலே பேசினேன். நல்ல தமிழைச் சொன்னால் கற்றுக்கொள்வதற்குத் தயார். சில மாதங்களுக்கு முன் நான் நாகபுரிக்கு சென்றிருந்தபோது, அங்குள்ள முதல் மந்திரி பண்டிட் சுக்லா அவர்களை சந்தித்தேன். அவர் என்னுடன் மகாநாடு நடக்கும் ஹாலுக்கு வெளியே ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் மேடைக்கு வந்தவுடன் ஹிந்தியில் உரைக்க ஆரம்பித்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பொறுத்துக்கொண்டிருந்தேன். அது ஒரு அகில இந்திய மகாநாடு **(All India Conference)**. அந்த மகாநாடு முடிந்த பிறகு நான் பண்டிட் சுக்கிலா அவர்களைப் பார்த்து **'I do not understand a word of what you spoke'** என்று கேட்டேன். அதற்கு அவர் **'Yes, it does not matter'** என்று கூறினார். அப்போதுதான் எனக்குக் கொஞ்சம் ஆவேசம் பிறந்தது. அவர்கள் மட்டும் ஹிந்தியைப் பரப்பவேண்டுமென்று இப்படிப் புரளி செய்யும்போது நாம் மட்டும் என் தமிழ் பேசுவதற்கு புரளி பண்ணக்கூடாது என்று தோன்றிற்று. ஆங்கிலம் வேண்டியதுதான். சாஸ்திர விஷயங்களைப் பார்க்கின்றபோது அனைத்துலகத்தோடு **(International)** ஒட்டிப்போவதற்கு ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மனி போன்ற மொழிகள் வேண்டியதுதான். ஆனால் அதற்காக நம் நாட்டுப் பழக்கத்திற்காக தமிழைத் தள்ளிவிடக்கூடாது. தமிழ் மொழிவேண்டும். தமிழ் மொழியைக் கைவிடக்கூடாது. என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த முறையில் நண்பர் கஜபதி நாயகர் அவர்கள் இந்த மூன்று ஜில்லாக்களுக்கும் தமிழைக்கொண்டுவரவேண்டுமென்று கேட்பது நியாயமானதே. அதை நான் ஆதரிக்கின்றேன். என்றைக்காவது ஒரு நாளைக்கு நாம் இதை ஆரம்பிக்கத்தான் போகின்றோம். பின்னால் ஆரம்பிக்கப்போவதை இப்போதே உடனடியாக கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்தால் அது பயனுடையதாக இருக்கும். இதை அரசாங்கம் புறக்கணித்துவிடக்கூடாது. இன்று **Non-official day** ஆகையால் இந்தத் தீர்மானம் கோண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். மேலும், நம்முடைய அதிகாரிகளும் தமிழில் பேசவும், எழுதவும் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் கஷ்டமும் இராது. அப்படியெல்லாம் செய்யமுடியாது என்று ஒரேயடியாக தள்ளிவிட்டாலும் அந்த அடியையும் வாங்கிக்கொள்ளத் தயார். ஆனால் அவ்வாறு செய்யக்கூடாது. கனம் நிதி மந்திரி அவர்கள் இதைப்பற்றி யோசனைசெய்து 2, 3 ஜில்லாக்களுக்காகிலும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எப்படியாவது மறு எலக்ஷனுக்குள்ளாகவாவது கொண்டுவருவதற்கு ஆராயலாம். ஆங்கிலம் இருக்கவேண்டும். அதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. சாஸ்திர விஷயங்களிலே அவைகளை வைத்துக்கொண்டு, மற்ற நடவடிக்கைகளுக்கு தமிழை என் உபயோகப்படுத்தக்கூடாது என்பது எனக்கு விளங்கவில்லை. இதனை அவர்கள் உடனடியாகச் செய்யாவிடில் தமிழ் மக்கள் நிச்சயமாக அரசாங்கத்தைப் பழிப்பார்கள். இப்படியெல்லாம் கொண்டுவந்தால்தான் தமிழ் வளர முடியும். தென் கன்னடத்தைச் சேர்ந்தவர்களும், மலபாரைச் சேர்ந்தவர்களும் பலர் இருப்பதற்காக தமிழ் கொண்டுவருவது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லுவது எனக்கு புரியவில்லை. நம்முடைய தமிழர்களிலே எத்தனையோ பேர்கள் ஆங்கிலமே தெரியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை கவனிக்க வேண்டாமா ? அவர்களுடைய பொறுப்பைக் கவனிப்பதே இல்லையே ? என் தமிழ் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடத்தில் மந்திரிகளும்

தமிழில் பேசக்கூடாது என்றுதான் எனக்குப் புரியவில்லை. ஏதோ வாய்க்கரிசி போடுவதுபோல் ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் தமிழில் பேசிவிட்டால் போதுமா ? வீட்டிலே பேசுவதெல்லாம் தமிழ் ; சாப்பிடும்போதும் தமிழ் பேசுகிறோம். அப்பொழுதெல்லாம் ஆங்கிலத்தைப்பற்றி நினைப்பதேயில்லை. ஆனால் இந்தச் சபையில் வரும்போது மட்டும் என் மந்திரிகள் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஆகவே இந்தத் தேர்தல் வருவதற்கு முன்பாக, எல்லா மந்திரிகளும் சேர்ந்து ஆலோசித்து உடனடியாக தமிழில் நடவடிக்கை நடத்துவதற்கு முன்வரவேண்டும். கொஞ்சம் மெதுவாக ஆரம்பிக்கலாம், யோசிக்கவேண்டுமென்று சொல்வதில் பிரயோஜனமில்லை. இன்று அதிகாரிகளை எடுத்துக்கொண்டாலும் **go slow** வாகத்தான் எந்தக்காரியங்களையும்செய்கிறார்கள். பத்து நாளைக்குள் செய்யவேண்டியதை, **30** நாளைக்கு செய்கிறார்கள். அப்படி **go slow** **வா**க இல்லாமல் தமிழை உடனடியாக நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ரொம்பவும் மனப்பூர்வமாக ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

SRI K. BHASHYAM :—" கனம் தலைவர் அவர்களே, நான் இப்பொழுது இங்கு தமிழ் மொழியில் பேசுவதற்கு உங்கள் உத்திரவைக் கோருகிறேன். இந்தத் தீர்மானம் கொண்டுவந்ததைப் பற்றி நான் ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால் தமிழ் பாஷையை, தாய் பாஷையை நாம் வளர்க்க வேண்டியது நம்முடைய கடமையாகும். அதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் மட்டும் உண்டாகிறது. அதாவது இந்தத் தீர்மானத்தை சற்று திருத்தி அமைக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். என்னவென்று கேட்டால் இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் **(district)** இந்தத் தமிழ்மொழியில் கடிதப் போக்குவரத்து செய்யும் விஷயத்தில் அந்த ஊரிலுள்ள மாவட்ட அதிகாரி இருக்கிறாரே, அவரைப் பற்றிய அபிப்பிராயம் என்னவென்று கேட்கிறேன்? அந்த அதிகாரியினுடைய அபிப்பிராயம் என்னவென்று யோசிக்க வேண்டும். கொஞ்ச நாளைக்கு முன்பு நான் ஒரு சமாசாரப் பத்திரிகையை வாசிக்கும்போது அதில் இதைப் பற்றி ஒரு விஷயம் தெரிந்துகொண்டேன். என்னவென்று கேட்டால், அவர்கள் தமிழிலே நடத்துகிற கடிதப் போக்குவரத்து இருக்கிறதே, அது கிராமத்திலே இருக்கிற கிராமவாசிகளுக்கு இந்த அதிகாரிகளால் எழுதக்கூடிய வாசகம் புரியக்கூடியதாக இல்லை. இவர்கள் பேசுகிறதுபோல் தமிழை எழுதாமல், பழையகாலத்து செந்தமிழ் நடையில் எழுதுவதுபோல் எழுதி விடுகிறார்கள். நாடோடித் தமிழில் எழுதினால் அவர்களுக்குப் புரியும். செந்தமிழில் எழுதுவதால் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இந்த சமாசாரத்தைத் தெரிந்துகொண்டேன்.

" அடுத்து, நான் ஓரிடத்தில் தமிழில் பேசுவதற்காகப் போயிருந்தேன். உட்கார்ந்திருந்த என்னை, அங்குள்ள ஒருவர் 'உங்களுக்குத் தமிழில் பேசத் தெரியுமா' என்று கேட்டார். நான் அவரிடம், 'எனக்கு இலக்கண இலக்கியத்தோடு பேசத் தெரியாது ; ஆனால் நாடோடித் தமிழில் பேசத் தெரியும்' என்று கூறி, அங்குள்ள மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய நாடோடித் தமிழில் பேசினேன். அங்குள்ள மக்களும் சமாசாரத்தை புரிந்துகொண்டார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த மாதிரியாக நாடோடித் தமிழில் கடிதப் போக்குவரத்துக்களை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான். அதை மட்டும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மற்றும் என் அபிப்பிராயங்களைச் சொல்லுகிறேன். இப்போது கிராமவாசிகளிடம் மாவட்டம் என்று சொன்னால் அவர்களுக்கு ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது. டிஸ்ட்ரிக்ட் என்று சொன்னால் ஒருவேளை புரிந்துகொண்டாலும் புரிந்து கொள்ளலாம்."

SRI K. BALASUBRAMANYA AYYAR :—" ஜில்லா என்று சொன்னால் தெரிந்து கொள்வார்கள்."

19th March 1955]

Sri K. BHASHYAM :—" ஜில்லா என்பது உருது வார்த்தை. அதை உபயோகப்படுத்த எனக்கு இஷ்டமில்லை. ஜில்லா என்பது கூடாது. வேறு வார்த்தை சொல்ல வேண்டும். மாவட்டம் என்று சொன்னால் அது என்ன சக்கர வட்டமா என்று சந்தேகப்படுவார்கள்."

Sri M. P. GOVINDA MENON :—" What is meant by ' Mavattam " ?

Sri A. GAJAPATHY NAYAGAR :—" மாவட்டம் என்றால் பெரிய வட்டம். அதாவது பல சிறிய ஊர்கள் சேர்ந்தது என்பதாகும்."

Sri K. BHASHYAM :—" இதை அந்த மக்களுக்குப் போய்ச் சொல்ல வேண்டுமே? யார் போய்ச் சொல்லுவது ? அதுதானே இப்போது கஷ்டமாக இருக்கிறது. குழு என்ற வார்த்தையைச் சொன்னால் அது குழுவா, புழுவா என்று சந்தேகமேற்பட்டு அவர்களால் சரிவர புரிந்து கொள்ள முடிவதில்லை. பெடிஷன் என்று சொன்னால் எல்லோருக்கும் புரிகிறது. ஆனால் அதையே மனுபோட வேண்டுமென்று சொன்னால் உடனே புரிந்து கொள்ள முடிவதில்லை.

" அதேபோல் ஒரு கிராமவாசி எளிதாக ' எனக்கு இன்னும் நோட்டீஸ் வரவில்லை ' என்று சொல்லுகிறான். ஆனால் அவன் அதைத் தமிழில் சொல்வதேயில்லை. அதே போல் ' நான் இன்று கோர்ட்டுக்குப் போகவேண்டு ' மென்றுதான் சொல்லுகிறான். ஆனால் ' நான் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டு ' மென்று சொல்வதில்லை. அப்படிச் சொன்னாலும் நமக்கு உடனே அர்த்தம் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஒரு ஜட்காக்காரனைப் பார்த்து ' நீ நீதிமன்றத்திற்கு வண்டியை ஓட்டு ' என்று சொன்னால் அவனுக்கு அது கஷ்டமாகத்தான் இருக்கும். அதே போல், கான்ஸ்டபிள் என்பதற்கு போலீஸ்காரன் என்று சொன்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் காவற்சேவகன் என்று சொன்னால் புரிந்துகொள்ள கஷ்டமாக இருக்கிறது. இந்த மாதிரியாக பல கஷ்டங்கள் ஏற்படுகிறது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்பதற்கு என்ன தமிழ் வார்த்தை போடுவார்களோ தெரியவில்லை. இந்த மாதிரியான பல வார்த்தைகளுக்கு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அப்பீல், கம்ப்ளைண்ட் இதுபோன்ற வார்த்தைகள் வந்துகொண்டே இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் நாடோடித் தமிழில் வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, செந்தமிழைப் புகுத்தினால் கஷ்டங்கள்தான் ஏற்படும்.

" சாதாரணமாக, ரேடியோவைத் திருப்பினால், அதில் பேசக்கூடிய வார்த்தைகளில் பாதிக்குமேல் புரியவில்லை. ரொம்ப செந்தமிழாக இருந்துவிடுகிறது. இத்தனைக்கும் நாம் தினமும் வீட்டிலே பேசுவது தமிழ் ; வீட்டிலுள்ள குழந்தைகள் எல்லாம் தமிழ் பேசுகின்றன. நான் தினமும் இராமயணத்தை தமிழில் படிக்கின்றேன். ஆனால் இந்தத் தமிழ் வேண்டுமென்று சொல்லுகிற சில பேர்கள், செந்தமிழை உபயோகித்து நம்மைக் குழப்புகிறார்கள். அந்த அட்டூழியத்தைத் தான் என்னவென்று சொல்வது என்று எனக்கே தெரியவில்லை. அதைமாற்றி நாடோடித் தமிழில் அமைத்தால் நல்லதென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

Mr. CHAIRMAN :—" The discussion on the resolution will be continued on the next Non-official day. The House will now adjourn to meet again at 3 p.m. on Thursday, the 24th March 1955."

The House then adjourned.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS